**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2023**

----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அவை பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது தொடங்குகிறது. எனினும், பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படாது. இதன் | நிதி மற்றும் கணக்காய்வு குழு SLPSAS உடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக பெறுமானத்தேய்வு தொடர்பான கணக்கீட்டு கொள்கையை மதிப்பாய்வு செய்யும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியங்கள் பின்பற்றப்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவாக, பற்றாக்குறை மற்றும் நிலையான சொத்துக்கள் ரூபா 3,232,596 குறைத்துக் காட்டப்பட்டது. | | |
| (ஆ) | ரூபா 110,173,417 தொகையான ஏனைய சொத்துக்கள் மற்றும் துரித உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி (AHEAD) செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட ரூபா 348,908,722 தொகையான சொத்துக்கள் ஆகியவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒரே தன்மையான அல்லது செயற்பாட்டின் சொத்துக்களை வகைப்படுத்தாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | இது தெளிவுபடுத்துவதற்காக நிதிக்கூற்றுக்களில் "AHEAD" வகையின் கீழ் வழங்கப்படுகிறது. | AHEAD செயற்திட்டத்தில் இருந்து உரிய சொத்துக்களை தொகுதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 313,109,540 தொகையான மூலதன மானியம் மற்றும் நன்கொடைகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஆளுகை அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் SLPSAS 11 ஐப் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |
| (ஈ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கான மென்பொருளை மாற்றியமைப்பதற்காக ஏற்பட்ட ரூபா 1,032,395 தொகை நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்படாமல் செலவினமாக அறவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக பற்றாக்குறை மற்றும் அசையா சொத்துக்கள் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டன. | கணனி மென்பொருள் வகையின் கீழ் நிலையான சொத்துக்கள் பதிவேட்டு முறைமையை மாற்றியமைப்பதற்காக ஏற்படும் செலவினங்களை மூலதனமாக்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய செலவினங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான 241.2 ஹெக்டெயர் பரப்பளவிலான காணி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவத்தை மாற்றுவது பூர்த்தியடைந்தவுடன், SLPSAS 07 ஆக அறியப்பட்ட கணக்கீட்டு நியமங்களை கண்டிப்பாக கடைபிடிக்கும் வகையில் உடனடி மற்றும் விடாமுயற்சியுடன் கூடிய நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படும். | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 431,315,889 மொத்த பெறவேண்டிய மீதிகளில், ரூபா 238,964,922 தொகை அல்லது 52 சதவீதத்திற்கு சமமான தொகை 03 முதல் 40 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில், 10 முதல் 41 ஆண்டுகள் வரை பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய 66 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 147,164,353 பிணைமுறி பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை கடிதம் ஏனைய பிணைமுறி செலுத்தாதவர்கள் மற்றும் அவர்களின் பிணைதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், பிணைமுறி செலுத்தத் தவறியவர்களுக்குத் தெரிவிப்பதற்கு உரிய உயர் ஸ்தானிகராலயத்திற்கு கடிதம் அனுப்புவதற்கு பேரவை முடிவு செய்தது. | பிணைமுறியை மீறுபவர்களிடம் இருந்து பிணைமுறி பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,973,526 கூட்டுமொத்த தொகை 3 முதல் 18 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு அவற்றைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | தற்போது நிலுவையாக உள்ள அனைத்து செலுத்த வேண்டியவைகளையும் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. | நிலுவையாக உள்ள அனைத்து செலுத்த வேண்டியவைகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள். | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 செப்தெம்பர் 9 ஆம் திகதிய 05/2015 ஆம் இலக்க நிதிச் | இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி (SLUG) நிகழ்வுகளுடன் தொடர்புடைய ரூபா 4,845,200 கூட்டுமொத்தமான முற்பணங்களின் தீர்ப்பனவு 32 முதல் | பெரும்பாலான முற்பணங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை கடிதம். | 112 நாட்கள் வரையிலான வீச்சில் தாமதப்படுத்தப்பட்டிருந்த 22 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br><br>SLUG நிகழ்வுக்கு ரூபா 100,000 என்ற சுற்றறிக்கை வரம்பிற்கு முரணாக அதிகபட்சமாக ரூபா 500,000 வரை முற்பணம் செலுத்தலாம் என்ற முடிவு 2023 யூன் 24 இல் பல்கலைக்கழக பேரவையால் எடுக்கப்பட்டது, அதன் பிரகாரம், பொது திறைசேரியிடம் இருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமல் 24 சந்தர்ப்பங்களில் வரம்பை மீறி ரூபா 7,254,680 கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 383 | ரூபா 3,925,059 மற்றும் ரூபா 1,604,146 கூட்டுமொத்தமான மூன்று வங்கிக் கணக்குகளில் உள்ள நேரடி வரவு வைப்புக்கள் 13 ஆண்டுகளுக்கும் மேலாக இனங்காணப்படாமல் வங்கி கணக்கிணக்க கூற்றில் முறையே இனங்காணப்படாத வரவுகளாகவும், தேறாத வைப்புக்களாகவும் காட்டப்பட்டுள்ளன. | பேரவையால் 2009 இற்கு முன்னர் ஆவணங்களை கண்டுபிடிக்க முடியாதிருந்ததுடன் பேரவையால் முடிவு செய்யப்பட்டவாறு தேவையான பதிவழிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | புதிவழிப்பதற்கு முன்னர் உரிய வைப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணங்கள் 571 | 03 முதல் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக கணக்குகளில் காணப்பட்ட ரூபா | மேற்கூறிய நடைமுறையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 16,264,477 கூட்டுமொத்தமான 51 பிடித்துவைத்தல் பண வைப்புக்கள் மற்றும் ரூபா 6,916,081 கூட்டுமொத்தமான 08 வகையான மீளளிக்கத்தக்க வைப்புக்கள் தொடர்பாக அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | III ஆம் அத்தியாயத்தின் 20.8 ஆம் உபபிரிவு மற்றும் VI ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உபபிரிவு | 2020 ஆகஸ்ட் 29 இல் தாவரவியல் துறையின் தரம் I சிரேஷ்ட விரிவுரையாளரின் பதவி விலகலை பேரவை ஏற்றுக்கொண்டிருந்தது. விரிவுரையாளர் 2020 செப்தெம்பர் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் முந்தைய பதவிக்கு மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டார். எனினும், ரூபா 91,310. ஆரம்ப சம்பளத்தில் வைப்பதற்கு பதிலாக தாபன விதிக்கோவையின் ஏற்பாட்டிற்கு முரணாக சம்பள படிநிலை ரூபா 119,520 ஆக வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2020 செப்தெம்பர் 02 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் மேற்படி | பேரவையின் 340வது கூட்டத்தின் முடிவின் பிரகாரம் அவரது சம்பளப் புள்ளியை மீள சீர்செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விரிவுரையாளருக்கு ரூபா 3,633,900 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (ii) | UGC இன் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதம் மூலம் திருத்தப்பட்டவாறு XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான அறிக்கை 2024 யூலை 17 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் மீதான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த முடியாத அனைத்து பொருட்களையும் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கிணங்க பதிவேடுகள் சீர்செய்யப்படும். | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய கடிதம் | மூன்று வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படக்கூடியதாக இருந்த ரூபா 2,305,000 தொகையான மஹாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கூறின் மீள்நிரப்பலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உதவித் தொகை நிதியை மீள்நிரப்பு செய்வது தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழுவுடன் பல்கலைக்கழகம் வழக்கமான தொடர்பாடல் மற்றும் விடாமுயற்சியுடன் பின்தொடர்கிறது. | UGC சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2022 சனவரி 03 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க ஆணைக்குழு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 131,242,338 தொகையான நூலக புத்தகங்கள் மற்றும் | 2024 சனவரி மாதத்தில் தொடங்கிய புத்தகங்கள் மற்றும் பருவகால | UGC சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி. | பருவகால இதழ்களின் கிரய மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இதழ்களை கொள்வனவு செய்வதற்கான சாதாரண வழக்கமான நடைமுறைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 379,540,072 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 503,716,980 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 124,176,908 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே மேற்படி முன்னேற்றத்திற்கு காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இங்கிலாந்தில் Ph.D. படிப்பதற்காக ரூபா 14,258,446 பிணைமுறியொன்றை கைச்சாத்திட்டுள்ள ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவருக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட்டதுடன் கற்கை விடுமுறை கணிப்பீட்டில் ஏற்பட்ட கணிப்பீட்டுப் பிழை ரூபா 3,601,837 கூட்டுமொத்தமான கற்கைநெறிக் கட்டணம் மற்றும் படிகளிற்கு வழிவகுத்த போதிலும் பொறுப்பான அதிகாரிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகுதிவாய்ந்த அதிகாரக் காலத்தின் போது, தகுதிகாண் காலம் மற்றும் கொடுப்பனவுகளை ஒரு விசேட சம்பவமாக நீடிப்பதற்கு பேரவை அங்கீகரித்துள்ளதுடன் இது எதிர்காலத்தில் தொடராது. | UGC மற்றும் HEIs இன் தாபன விதிக்கோவை மற்றும் UGC சுற்றறிக்கைகளை கண்டிப்பாக கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 06 ஆம் திகதிய 21/2084/306/094 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில்துறை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரின் செயலாளரின் 2021 திசெம்பர் 30 ஆம் திகதிய 4/1/1/501 VOL XIII ஆம் இலக்க கடிதம் என்பவற்றின் பிரகாரம், ஒப்பந்ததாரர்களுக்கு விலை வேறுபாடுகளுக்கான இழப்பீடு CIDA இன் விலை | கல்வி அமைச்சின் செயலாளரின் 2022.09.23 ஆம் திகதிய எச்ஈ/ஐடிடி/ஜீஈஎன்/2022/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் விலை அதிகரிப்பின் இழப்பீட்டுத் தொகைக்கு அத்தகைய வரம்பு எதுவும் (ஒப்பந்தத் தொகையில் 20%) குறிப்பிடப்படவில்லை. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாட்டு சூத்திரங்களைப் பயன்படுத்தி, ஒப்பந்த பெறுமதியில் 20% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது. எனினும், ஒரு பல்நோக்கு கேட்போர் கூடத்திற்கான இரண்டு மாடி கட்டிடத் தொகுதியின் வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் ஆணையிடுதலுக்கான நிர்மாணப் பணிகளில், ஒப்பந்ததாரர் ரூபா 36,762,239 விலை அதிகரிப்பாகக் கோரியுள்ளார், இது ரூபா 13,928,550 ஆல் வரம்பை மீறி வேலை செய்யப்பட்ட தொகையில் 32.2% ஆக இருந்தது. | | |
| (ஆ) | மின் விநியோகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடத்தின் கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை, வலையமைப்பு இணைப்புக்கான ரூபா 28,756,766 தொகையான ஒப்பந்தம் 2022 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கூறிய காரணத்திற்காக பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தது. | தவிர்க்க முடியாத பல சூழ்நிலைகள் காரணமாக, தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் கட்டிட நிர்மாண செயற்திட்ட பூர்த்தி செய்தல் திகதி பலமுறை நீடிக்கப்பட்டது. எனினும், வலையமைப்பு இணைப்பு வழங்கல் மற்றும் நிறுவுதல் 2024.02.29 இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | மேலும் காலதாமதமின்றி மின் விநியோகத்தை வழங்கி நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திருகோணமலை வளாகத்தில் உள்ள 3 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதியை நிர்மாணிக்கும் பணியானது 2017 ஆம் ஆண்டில் RDA ஊடாக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 145 மில்லியன் ஒப்பந்த பெறுமதியுடன் வழங்கப்பட்டது. எனினும், ஒப்பந்த காலத்தில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல், 2017 முதல் 2023 செப்தெம்பர் வரை நான்கு நீடிப்புக்கள் வழங்கப்பட்டன. இந்த நீடிப்புக்கள் இருந்த போதிலும் ரூபா 60 மில்லியன் கிரயமான 1.3 கிமீ வீதி மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டது. ஆறு ஆண்டுகள் கணிசமான தாமதம் ஏற்பட்டதுடன் மீதமுள்ள 1.7 கிமீ 2023 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளின் விலை பாரியளவில் அதிகரித்ததன் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மதிப்பீட்டில் பல தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மிகுதி 1.7 கிமீ வீதியை பூர்த்தி செய்வதற்கு நிதி போதாதிருந்தது. | நிர்மாணப் பணிகளை மேலும் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்விசார், கல்விசாரா, கல்வி உதவிப் பதவியணியினர் மற்றும் நிர்வாகப் பதவிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 49 சதவீதமாக இருந்த மொத்தம் 136 பதவிகள் மீளாய்வாண்டில் வெற்றிடமாக உள்ளது. இந்நிலைமை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மோசமாகப் பாதித்திருந்த போதிலும், இது தொடர்பில் வளாகம் உரிய நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | கல்வி அமைச்சின் 2022 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், நிரந்தர மற்றும் தற்காலிக பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செயன்முறை நிறுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |